மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 72/2014

பெயர் : சுகவர்ணம்
சாட்சி – பி.வா.சா–3 நாள்: 17.03.2026

---

**குறுக்கு விசாரணை (வாதிகள் தரப்பு)**

1. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.36 முதல் பி.வா.சா.ஆ.46 வரையிலான ஆவணங்களை எங்களது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் எங்கள் எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றும், அவ்வாறு எதிர்வழக்குரையில் சொல்லாத ஆவணத்தை பொறுத்து சாட்சியம் அளிக்க முடியாது என்றும் எனவே எனது சாட்சியம் மற்றும் மேற்படி ஆவணங்கள் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் அருணாசல கவுண்டரின் வாரிசுகளுக்கு சேர வேண்டிய சொத்துக்கள் என்றால் சரியல்ல. அவர் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார்.

2. நான் தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக வழக்கிற்கு தேவையில்லாத ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் அருணாசல கவுண்டர் எந்த செட்டில்மெண்ட் ஆவணமும் எழுதிவைக்கவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் கோரிய பரிகாரங்கள் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN
Digitally signed by V KALIDASAN
Date: 2026.03.17 18:21:40 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பல்லடம்.